**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.145/2022 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.8 |
| பெயர் | ஜெயந்த் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | ராஜசேகர் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 02.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கடந்த 27.06.2022 தேதியில் மாலை சுமார் 6.20 மணிக்கு நான் பணியில் இருந்தபோது 30 வயதுமிக்க பெண் இந்திரா, க.பெ.பழனியப்பன் என்பவரை அவரது உறவினர் தினகரன் என்பவர் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார். அவரை விசாரித்தபோது அதே தினம் மாலை 6.00 மணியளவில் SVS கல்லூரி அருகே இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது 4 சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். காயம்பட்ட இந்திராவை பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவருக்கு வலதுகால்தொடை, வலது கணுக்கால் மற்றும் முன்பக்கதலையில் காயம் ஏற்பட்டிருந்தது. வலதுகால் தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தேன். நான் விபத்து பதிவேடு பதிவு செய்தேன்.

அன்றைய தினம் அதே விபத்தில் காயமடைந்த 8 வயதுடைய பவின்

த.பெ.பழனியப்பன் என்ற சிறுவனை அவருடைய உறவினர் சிகிச்சைக்கு சேர்த்தார். அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவருக்கு வலது பக்க தலை, வலது கால் ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அதன்பிறகு மாலை 6.55 மணியளவில் சிகிச்சைக்கு சேர்தத இந்திரா சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். அவரது பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் பதிவு செய்த இந்திரா என்ற பெண்ணிற்குரிய விபத்து பதிவேட்டில் இரு சக்கர வாகனம் மற்றொரு இரு சக்கர வாகனத்துடன் மோதியதாக குறிப்பிட்டுவிட்டு அதன்பின்னர் ஒரு இரு சக்கர வாகனத்தை அடித்து திருத்தம் செய்து நான்கு சக்கர வாகனம் என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதே போல் பவின் என்ற சிறுவனுக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டிலும் இரு சக்கர வாகனம் மற்றொரு இரு சக்கர வாகனத்துடன் மோதியதாக குறிப்பிட்டுவிட்டு அதன்பின்னர் ஒரு இரு சக்கர வாகனத்தை அடித்து திருத்தம் செய்து நான்கு சக்கர வாகனம என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

Sd/– ஜெயந்த்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.